

விருதுநகர் தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தை முன்னிட்டு விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் இமானுவேல் சேகரன் திருவுருவப்படத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சரும் தெற்கு மாவட்ட செயலாளர் கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தியாகி இமானுவேல் சேகரன் 67வது நினைவு தினத்தை முன்னிட்டு விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் இமானுவேல் சேகரன் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வு சாத்தூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. இமானுவேல் சேகரின் திருவுருவப்படத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் நிர்மலா கடற்கரை ராஜ், நகர சேர்மன் குருசாமி, தி.மு.க. தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ரமேஷ், ஒன்றிய செயலாளர் முருகேசன் உள்ளிட்ட பங்கேற்றனர்.

### வி.எல்.ஜோதி – செல்வி ஜோதி தலைமை! மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் – அரக்கோணம்!

# ஜி.ஜெனிஷ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் ஆர்.காந்தி வாழ்த்துரை!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – வினோத்காந்தி – கழகத்தினர் பங்கேற்பு!

இராணிப்பேட்டை, செப். 13-

இராணிப்பேட்டை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அரக்கோணம் ஜி. ஜெனிஷ்குமாரின் சகோதரரும், டி.ஜார்ஜ் - ஜி.மேரி ஆகியோரின் புதல்வருமான ஜி.பூவரசனுக்கும், திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை வட்டம் ஜி.சிவக்குமார் - எஸ்.தீபா ஆகியோரின் புதல்வி எஸ். மௌனிகாவுக்கும் மணவிழா வரவேற்பு 16.9.2024 திங்கள்கிழமை மாலை 6.30 மணியளவில் அரக்கோணம் பழைய பேருந்து நிலையம், தூய அந்திரேயர் ஆலய வளாகத்தில் நடைபெறுகிறது.



இம்மணவிழா வரவேற்பிற்கு அரக்கோணம் நகரக் கழகச் செயலாளர் வி.எல். ஜோதி, திருமதி செல்வி ஜோதி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., வினோத்காந்தி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., எஸ்.சந்திரன் எம்.எல்.எ., மேயர் பிரியா ராஜன், பா.மணிமாறன், வழக்கறிஞர் மு.சரவணன், லட்சுமிபாரி, கே.சுஜாதா வினோத், சிவா, ம.கிரண், பன்னீர்செல்வம்,

ஏ.கே.சுந்தரமூர்த்தி, எஸ்.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், மு.கண்ணையன், ஏ.அசோகன், ஆர்.தமிழ்செல்வன், கே.பசுபதி, ஏ.சவுந்தர், பெ.வடிவேல், பெருமாள், எஸ்.நாகராஜ், ஜி.டில்லி பாபு, கே.பி.வெங்கடேசன், எம்.கே.சிவா, எஸ்.சரவணகுமார், ஜெ.தென் கோஸ்கோ, எஸ்.பிரசாத், ஜெ.நவின்ராஜ், துரை சீனிவாசன், கலாவதி அன்பு லாரன்ஸ், கோ.வா.தமிழ்வாணன், ஏ.அன்பு லாரன்ஸ், நந்தாதேவி, எஸ்.ரமேஷ்பாபு, ஆர். கே.லிங்கம், வி.பாலன், அ.தமின் அன்சாரி, என்.அரிகிருஷ்ணன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

என்.ராஜ்குமார் நன்றி கூறுகிறார்.

ஜி.ஜெனித்குமார் - பிரியா, ஜி.கிரியோன் மேத்யூ - ஜெமிசேகரின், ஜி.ஜான் மனோ - ஜெ.பிரியதர்ஷினி ஆகியோர் இம்மணவிழா வரவேற்பிற்கு வருகை தரும் அனைவரையும் வரவேற்கிறார்.

### நாடுமுழுவதும்

# ஐ.ஐ.டி.க்களில் ஆசிரியர் நியமனத்தில் இட ஒதுக்கீடு புறக்கணிப்பு!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. கண்டனம்!

சென்னை, செப். 13 -

நாடு முழுவதும் உள்ள ஐ.ஐ.டி.க்களில் ஆசிரியர்கள் நியமனத்தில் இடஒதுக்கீடு புறக்கணிக்கப்படுவது ஆர்.டி.ஐ மூலம் அம்பலமானதாக தி.மு.க. எம்.பி வில்சன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியதாவது:

நாடு முழுவதும் 23 ஐ.ஐ.டி.க்கள் உள்ளன.

அவை இந்திய அரசால் நிறுவப்பட்ட உச்ச அமைப்பான ஐ.ஐ.டி கவுன்சிலால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஒன்றிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் (தற்போது கல்வி அமைச்சர்) இந்த கவுன்சிலின் அதிகாரபூர்வ தலைவராக பணியாற்றுகிறார்.

ஐ.ஐ.டி.களில் ஆசிரிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பில் எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓ.பி.சி.யினருக்கு இடஒதுக்கீட்டை அமல்படுத்த ஐ.ஐ.டி கவுன்சிலின் நிலைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஐ.ஐ.டி கவுன்சிலின் தலைவர் இந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இடஒதுக்கீட்டை அமல்படுத்தினார்.

எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓ.பி.சி பிரிவினருக்கான இந்த இட ஒதுக்கீடு முறையாகப்பின்பற்றப்படுகிறதா அல்லது இந்த ஐ.ஐ.டிகளில் வெறும் உதட்டளவில் மட்டுமே உள்ளதா என்பதை ஆராய வேண்டியது அவசியமாகிறது.

ஒரு உதாரணமானது சில சட்டவிரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், அகில இந்திய ஓ.பி.சி. மாணவர் சங்கத்தின் தேசிய தலைவர் கிரண்குமார் எழுப்பிய கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில், காந்திநகர் ஐ.ஐ.டி.யில் அரசியலமைப்பு இடஒதுக்கீடு பின்பற்றப்படாததை வெளிப்படுத்துகிறது.

இங்கு மொத்த பேராசிரியர்களின் எண்ணிக்கை



190. இதில் தற்போது பொதுப் பிரிவில் 116 பேரும், ஓ.பி.சி. பிரிவில் 8 பேரும், எஸ்.சி. பிரிவில் 7 பேரும், எஸ்.டி. பிரிவில் 4 பேரும் என மொத்தம் 135 பேராசிரியர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கை அரசியலமைப்பு இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதை மீறுகிறது.

ஐ.ஐ.டி. கவுன்சிலின் தலைவர் என்கிற முறையில், தர்மேந்திர பிரதான் விளிம்புநிலை பிரிவின ருக்கான இடஒதுக்கீட்டை அவ்வப்போது மறுபரிசீலனை செய்வதும், ஏதேனும் பிறழ்ச்சி இருந்தால் அதற்கு அந்தந்த ஐ.ஐ.டி.களின் இயக்குநர்களை பொறுப்பேற்கச் செய்வதும், ஒழுங்கு நடவடிக்கையைத் தொடங்குவதும் அவசியம் ஆகும்.

எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓ.பி.சி பிரிவினருக்கான இட ஒதுக்கீடு மறுக்கப்படுவதை இந்த சமூகங்களுக்கு எதிரான வன்கொடுமைகளாகக் கருதி, துறைத் தலைவர்களுக்கான தண்டனை உட்பட அந்தந்த சட்டங்களில் திருத்தங்களை முன்மொழியுமாறு ஒன்றிய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், வீரேந்திர குமார், அர்ஜுன் ராம் மெக்வால் ஆகியோரை கேட்டுக் கொள்கிறேன்.

விளிம்புநிலை சமூகங்களை மைய அமைப்பிற்குள் கொண்டு வருவதற்கான ஒரே வழி இதுதான் என்பதோடு மட்டுமல்லாமல், இதன் மூலமே சமூக நீதியை அனைத்து மட்டங்களிலும் செயல்படுத்த முடியும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் மாநகராட்சி ஆணையர் மருத்துவர் என்.ஓ.சுகபுத்ரா முன்னிலையில் டவுன் பகுதியில் கட்டப்பட்டுள்ள நேதாஜி போஸ் மார்க்கெட்டினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் மாமன்ற உறுப்பினர் ரம்சான் அலி,உதவி ஆணையாளர்கள் ஜான்சன் தேவசகாயம்,சந்திர மோகன்,சுகிபிரேமலா உள்பட பலர் உள்ளனர்.

# நெல்லை மத்திய மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை, செப். 13 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை பி.பி.எல்.திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் வி.கே. முருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்தியமாவட்டப்பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில்மாநிலவர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலைராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,சட்டதிருத்தகுழு உறுப்பினர் சுப. சீதாராமன்,பாளை சட்டமன்றஉறுப்பினர்மு.அப்துல் வகாப்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ. எல்.எஸ். லெட்சுமணன்,பேச்சிப் பாண்டியன்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,எஸ்.வி. சுரேஷ்,கிரிஜாகுமார்,பொருளாளர்வண்ணைசேகர்,மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு பொதுக்குழு உறுப்பினர்கள் பி.எம்.சரவணன், நடராஜன்,ராஜேஸ்வரி,பகுதி செயலாளர்கள் அன்டன் செல்லதுரை (பாளை)பூ.சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்)மானூர் ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி (கிழக்கு) மாரியப்பன் (தெற்கு) அன்பழகன் (மேற்கு) பேரூர் செயலாளர்கள் செல்வபாபு (சங்கர் நகர்) பேச்சிகுட்டி (நாரணம்மாள்புரம்) உள்பட மாநகர, பகுதி,பேரூர், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட,மாநகர, ஒன்றிய, பகுதி,வட்டப்,பிரதிநிதிகள், மாவட்ட, மாமன்ற, பேரூர், மன்றஉறுப்பினர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

கழக சட்டதிட்டக்குழு உறுப்பினர் சுப. சீதாராமன் அவர்களின் மருமகன் சுந்தரம்,மாநிலநெசவாளர்அணி செயலாளர் பெருமாள் அவர்களின் தாயார் ஆறுமுகத்தம்மாள்,1வது வட்டக் கழக செயலாளர் பால்கட்டளை முருகன், 15 வது வட்டகழகசெயலாளர்முருகன், மேலப்பாளையம் பகுதி கழக செயலாளர்



துபாய் சாகுல் ஹமீது அவர்களின் தந்தை செம்மர் செய்யது முகமது, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் மலைபாண்டியன், பாளைப்பகுதி துணை செயலாளர் முகமது கமாலுதீன் தாயார் சௌதாள் பீவி, முன்னாள் மேயர் சரவணன் அவர்களின் தந்தை மாரியப்பன்,பாளை பகுதி 33 வது வட்ட பிரதிநிதி பழக் கண்ணன் தாயார் தங்கம்மாள்,மானூர் தெற்கு ஒன்றியசெயலாளர்மாரியப்பன் அவர்களின் தாயார் முத்துலட்சுமி, பாளைப்பகுதி 38 வது வட்ட செயலாளர் ஆவின் கல்யாணி அவர்களின் தாயார் சித்திரை வடிவு,தலைமைக்கழகபேச்சாளர் நெல்லை முத்தையா அவர்களின்சகோதரர்நாராயணன்,மாவட்டபொருளாளர்வண்ணைசேகர் அவர்களின்மாமியார்பழனியாச்சி, மாவட்ட துணைச் செயலாளர் தொ.மு.ச தர்மன் அவர்களின்சகோதரர்பாலகிருஷ்ணன்,பாளை 8 வது வட்டச் செயலாளர் செய்யது மைதீன் அவர்களின் மனைவி நஜிமுன் நிஷா, பாளை வடக்கு ஒன்றிய செயலாளர்முருகன், மேலப்பாளையம் 48 வட்டச்செயலாளர் அகமது பாதுஷா அவர்களின் தாயார் ஹாஜிமா ஜமீலா பீவி, முன்னாள்கழகமாமன்றஉறுப்பினர் காந்திமதி,மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் தளபதி ஆறுமுகம் அவர்களின் தந்தை பரமசிவன்,மாவட்டமகளிர்அணி தலைவர்பத்மாஅவர்களின் சகோதரர் சுப்பிரமணியன், கீழதென்கலம் கழக மூத்த முன்னோடி கணபதி, அனைத்தலையூர் கழக முன்னோடி பாலு அவர்களின் மனைவி சுந்தரி, சேதுராயன்புதூர் கிளைக் கழக செயலாளர் தாழை கரையான்,உக்கிரன் கோட்டை கழக முன்னோடி குணசிங்கம், மாநகர பிரதிநிதி தாடி லட்சுமணன் துணைவியார் ரமாதேவி ஆகியோரின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்தஇரங்கலைதெரிவித்துக் கொள்கிறது.

நடைபெற்றுமுடிந்தமக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணியை வழிநடத்தி தமிழ்நாட்டில் 40க்கு 40 என்ற இமாலய வெற்றியை தி.மு.க.கூட்டணி பெறுவதற்கு தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுபயணம்செய்தகழகத்தலைவர்,திராவிட முதலமைச்சர் அவர்களுக்கும்,கழகஇளைஞர் அணி செயலாளரும்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் எதிர்காலத்தில் தமிழ்நாட்டை வழிநடத்த இருக்கின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நடைபெற்றுமுடிந்தமக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி வேட்பாளர்திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட்புரூஸ்அவர்களுக்கு நெல்லைமத்தியமாவட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிகளில் அதிகப்படியான வாக்குகளை அள்ளித் தந்த வாக்காளர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த உழைத்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட,கிளைகழகச் செயலாளர்கள், நிர்வாகிகள்,கழகசார்புஅணிநிர்வாகிகள்,கழக உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழக தோழர்கள்,என அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

நம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆறாவது முறையாக கழக ஆட்சியை உருவாக்கி பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், உயர்கல்வி பயின்ற மாணவியர்களுக்கு புதுமைப்பெண் திட்டம்,மாணவர்களுக்குதமிழ் புதல்வன் திட்டம், மகளிருக்கு விடியல் பயணத்திட்டம்,மகளிர்க்குமாதரூபாய் 1000ம் கலைஞர் உரிமை தொகை திட்டம் போன்ற எண்ணற்ற சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும்நம்முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் தமிழ்நாட்டை பொருளாதாரத்தில் முதன்மை மாநிலமாகஆக்கிடவும்பலலட்சம் மனிதர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிடவும் அமெரிக்க நாட்டிற்கு சென்று ஒரு டிரில்லியன் டாலர்(ஒரு லட்சம் கோடி) என்றஇலக்கை நோக்கி முதலீடுகளை ஈர்த்து அன்னை தமிழ் நாட்டிற்கு முதலீடுகளை அள்ளிவரும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர்அவர்களின்நூற்றாண்டு விழாவை நெல்லை மத்திய மாவட்டத்தில் 100 இடங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தை வைத்து அஞ்சலி செலுத்தி 100 நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,அதேபோல்கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு 71 நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,அதேபோல்கழகஇளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாள் முன்னிட்டு 47 நலத்திட்ட உதவிகள்வழங்கியும் அதேபோல் முத்தமிழ் அறிஞர்கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாள் விழாவையும் இன்று வரை பொது மருத்துவம்,சித்த மருத்துவம், கண் மருத்துவ முகாம்கள், ரத்த தான முகாம்கள் போன்றவை நடத்தியும் ஏழை, எளிய நலிவுற்றவர்களுக்கு சேலை, வேட்டி வழங்கியும் மற்றும் ஆதரவற்ற இல்லங்கள்,மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் உணவுகள்வழங்குதல்,நலத்திட்ட உதவிகள்வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மத்திய மாவட்டத்திற்கும், கழகத்திற்கும் பெருமை சேர்த்த மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளைக்,கழகச் செயலாளர்கள்,கழகசார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் என நிகழ்ச்சி நடத்திய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது.

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் படியும் கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஒருங்கிணைப்பு குழுவின் முடிவின்படியும் கழகஅரசின்சாதனைகளை தங்கள்பகுதியில்சுவர்விளம்பரம் செய்திடவும்,கழகத் தோழர்களின் இல்லம் தோறும் கழக கொடி பறக்கட்டும் என்ற அறிவிப்புக்கிணங்க கழக நிர்வாகிகளின் இல்லங்களில்இருவண்ணக் கொடிகளை ஏற்றிடவும் கழக நிர்வாகிகளையும்,கழகத் தோழர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா! அறந்தாங்கியில்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் அண்ணா சிலைக்கு மாலை!

## மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை செப். 13 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காக வும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “ இப்படை தோற்கின் எப்படை வெல்லும் “ என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட் “ என்ற பெயரை “ தமிழ் நாடு ” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளான 15.9.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் எனது (அமைச்சர் எஸ்.ரகுபதி) தலைமையிலும், காலநிலை மாற்றம், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் முன்னிலையிலும் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அது சமயம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்



வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



சுதந்திரப் போராட்ட வீரர் இமானுவேல்_சேகரன் அவர்களின் 67வது நினைவு நாளை முன்னிட்டு, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி செல்லாயிபுரத்தில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இளமகிழன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.